Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 13 புதன்கிழமை [30-10-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 330

# திருமலை மாவட்டத்தில் நேற்று 8 படையினர் பலி!

## கிழக்கில் 5 நாள் தாக்குதலில் 33 சிப்பாய்கள் மரணம்

யாழ்ப்பாணம், அக்டோபர் 30

திருகோணமலை மாவட்டம் சேருநுவர பகுதியில் நேற்றுக் காலை 7 மணியளவில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில் 8 படையினர் கொல்லப்பட்டனர். அவர்களிடமிருந்து நவீன ரக ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

இதேவேளை—

கிழக்கு மாகாணத்தில் பரவலாகப் பல்வேறு இடங்களிலும் கடந்த ஐந்து நாட்களாக விடுதலைப் புலிகள் நடத்திவரும் தாக்குதல்களில் 33 படையினர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை திருகோணமலை மாவட்டம் சேருநுவரப் பகுதியில் இருந்து அரிப்பு சந்திக்கு ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் எட்டுப் படையினர் உயிரிழந்தனர் என்று விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனால் நான்கு இராணுவத்தினரும் நான்கு ஊர்காவலர்களும் கொல்லப்பட்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## வடக்கு-கிழக்கு யுத்தம்: தெற்கில் அக்கறையில்லை

### உட்கட்சிப் பூசலில் சிரத்தை!

கொழும்பு, அக். 30

வடக்கிலும், கிழக்கிலும் நடந்து வரும் இராணுவ நடவடிக்கைகள், விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் என்பன குறித்து அரச தரப்பு அரசியல்வாதிகளோ அல்லது எதிரணி தரப்பு அரசியல் வாதிகளோ அக்கறை காட்டவில்லை.

அவர்கள் இரு சாராரும் தத்தமது அணியில் எழுந்திருக்கும் உள்வீட்டு அரசியல் ''யுத்தங்களில்'' (பிணக்குகளில்) முழு மூச்சுடன் கவனம் செலுத்தி வருவதால்

(3 ஆம் பக்கம் பார்க்க)

### மூச்சந்தி மூரளி




## வி. பி. சிங் கைதாகி விடுதலை

லக்னோ, அக். 30

நேற்று அயோத்தி நகர் நோக்கி தமது தொண்டர்களுடன் சென்று கொண்டிருந்த முன்னாள் இந்தியப் பிரதமர் வி. பி. சிங் கைது செய்யப்பட்டார். அவருடன் ஜனதாதள் மற்றும் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்களும் கைதாகினர். பின்னர் அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

உத்தரப் பிரதேச மாநிலத்துக்குள் நுழைய இருந்த சமயம் அயோத்தியில் இருந்து 65 கிலோமீற்றர் தூரத்தில் வைத்து — திரு. வி. பி. சிங் பொலிஸாரினால் வழி மறிக்கப்பட்டார்; பின்னர் கைது செய்யப்பட்டார்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் ஆட்சியிலிருக்கும் பாரதீய ஜனதா அரசு, அயோத்தியில் சர்ச்சைக்குரிய பாப்ரி மசூதி அமைந்துள்ள நிலத்தைச் சுவீகரித்திருப்பதைக் கண்டித்தும்—

மசூதியை உடைத்து அந்த இடத்தில் ராமர் ஆலயம் கட்ட மாநில அரசு முயற்சி எடுப்பதாகத் தெரிவித்து, அதனைத் தடுத்து நிறுத்தவும்—

வி. பி. சிங் தலைமையில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று

(3 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறைப் பகுதியிலும் 4 இராணுவத்தினர் பலி

யாழ்ப்பாணம், அக். 30

அம்பாறை மாவட்டம் 36 ஆம் கொலனிப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இராணுவத்தினர் நான்கு பேர் கொல்லப்பட்டனர். படையினரிடம் இருந்து ஆயுதங்கள் சிலவும் கைப்பற்றப்பட்டன.

இங்களவருக்கு பாதுகாப்பு வழங்கும் பொருட்டு காவலில் நின்ற ஆறு இராணுவத்தினர் மீதே தாக்குதல் தொடுக்கப்பட்டது.

அப்பொழுது அவர்களில் நால்வர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். மற்றைய இருவரும் ஓடித் தப்பிவிட்டனர்.

இந்தச் சம்பவத்தின்போது புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள் வருமாறு:-

- ★ ஏ.கே.எல்.எம்.ஜி. ரகத் துப்பாக்கி — 01
- ★ அதற்கான மகஸின் — 08
- ★ ரி 56-2 ரகத் துப்பாக்கி — 03
- ★ அதற்கான மகஸின் — 12
- ★ ஏ.கே.எல்.எம்.ஜி. லிங்குகள் — 500
- ★ ரவைகள் — 700

(8 ஆம் பக்கம் பார்க்க)

### புலிகள் அதிரடித் தாக்குதல்

## 3 ராணுவ காவல் அரண்கள் வவுனியாவில் வீழ்ந்தன

யாழ்ப்பாணம், அக். 30

வவுனியா மாவட்டத்தில் உலுக்குளம் இராணுவமுகாம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11.15 மணியளவில், விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் நடத்தி மூன்று காவல் அரண்களைப் பிடித்தனர்; அங்கிருந்து பெரும் எண்ணிக்கையான ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினர்.

8 ஆம் யூனிட் பகுதியிலுள்ள காவல் அரண்களே புலிகளால் அழிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டன.

இந்தத் தாக்குதலின்போது அங்கு காவலில் நின்ற படையினர் அருகிலுள்ள முகாமுக்கு ஓடித் தப்பிவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

303 ரக துப்பாக்கி மற்றும் சில ரக துப்பாக்கிகள், ஏராளமான ரவைகள், தொலைத் தொடர்பு கருவி போன்றவை புலிகளினால் கைப்பற்றப்பட்டன. [ஒ 15]

## கொள்ளையர்கள் மூவருக்கு நேற்று மரண தண்டனை

இந்திய இராணுவத்தினர் ஆக்கிரமித்திருந்த போதும் அதற்குப் பின்னரும் பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் மூவருக்கு நேற்று வெவ்வேறு இடங்களில் விடுதலைப் புலிகளினால் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

கொள்ளையர் குழுவின் தலைவராகச் செயற்பட்டவர் என்று கருதப்படும் சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த கண்ணன் என்று அழைக்கப்படும் ஜெயராசா நந்தகுமார் (28 வயது) என்பவருக்கு சண்டிலிப்பாயிலும்—

அரியாலை மேற்கைச் சேர்ந்த செல்லத்துரை பரராசசிங்கம் அல்லது ராஜன் (38 வயது) என்பவருக்கு அரியாலை தபாற்கட்டைச் சந்தியிலும்—

அராலி வடக்கைச் சேர்ந்த கந்தசாமி உதயேந்திரன் அல்லது அப்புலிங்கம் (20 வயது) என்பவருக்கு சங்கானையிலும்—

நேற்று முற்பகல் 10 மணிக்கும் 11 மணிக்கும் இடைப்பட்ட வேளையில் தண்டனை வழங்கப்பட்டது. [ஒ-5-15]

## 'குமண' இன்று வரும்

யாழ்ப்பாணம், அக். 30

கொழும்பில் இருந்து புறப்பட்ட 'குமண' கப்பல் இன்று பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உணவு, மருந்து, தபால் ஆகியன கப்பலில் எடுத்து வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. [ஒ 3]

### மன்னாருக்குப் பதிலாக

## ஈழ அகதிகளை திருமலைக்கு அழைத்து வர அரசு ஏற்பாடு

கொழும்பு, அக். 30

தமிழ்நாட்டில் இருந்து வரும் ஈழ அகதிகளை மன்னார் துறைமுகத்தில் இறக்காது திருகோணமலை துறைமுகத்தில் இறக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

ஈழ அகதிகளைக் கொண்டு வந்து இறக்குவதற்காக ஏற்கனவே தலைமன்னார் இறங்குதுறையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்தது தெரிந்ததே.

தற்போது இந்த ஏற்பாட்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழகத்திலிருந்து முதலில் 800 அரச ஊழியர் வருவர்

### உப்புவெளி ஹோட்டல்களில் தங்குவர்

கொழும்பு, அக். 30

தமிழ் நாட்டில் தங்கி உள்ள ஈழ அகதிகளில் முதலில் அரசாங்க ஊழியர்களே அழைத்து வரப்பட உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் நாட்டில் இருந்து வரும் ஈழ அகதிகளில் முதல் தொகுதியில் 800 அரசாங்க ஊழியர்களைக் கொண்டு வர புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலைத் துறைமுகத்தில் இறக்கப்படும் இவர்களைத் தங்க வைப்பதற்காக உப்புவெளியில் இரு ஹோட்டல்கள் பயன்படுத்தப்பட உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாடு அரசு முதல் தொகுதியில் ஈராயிரம் ஈழ அகதிகளை அனுப்ப விரும்புவது என்பதும்— ஆனால் ஸ்ரீலங்கா அரசின் முடிவுக்கு இணங்க இந்த எண்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## காரைநகரில் ஷெல் தாக்கு!

யாழ்ப்பாணம், அக். 30

காரைநகர் படையினர் நேற்றுக்காலை பீரங்கி, ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

கோவளம் பகுதியில் இருந்து திருவடிநிலை பகுதி வரை பீரங்கி தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதே சமயம் காலை 9 மணியளவில் ஷெல் வீச்சும் நடத்தப்பட்டது. பொன்னாலை பெரியவர் கோவிலடியை அண்டிய பகுதியிலும் ஷெல் விழுந்து வெடித்தது. [ஒ-28-15]

### விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக

## தமிழ் தேசிய மீட்புப் படை தமிழகத்தில் இயங்குகிறது

### 'கியூ' பிரிவு பொலீஸ் அதிகாரி தகவல்

சென்னை, அக். 30

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக தமிழ்நாட்டில் 'தமிழ் தேசிய மீட்புப்படை' என்ற பெயரில் இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த இயக்கத்தைச் சேர்ந்த இந்தியத் தமிழர்கள் ஏற்கனவே யாழ்ப்பாணம் சென்று புலிகளிடம் ஆயுதப் பயிற்சி பெற்றுத் திரும்பி உள்ளனர்.

தமிழ் நாட்டில் புலிகள் இயக்கத்தினரையும் அவர்களுக்கு ஆதரவு வழங்குபவர்களையும் தேடிக் கண்டு பிடிக்கும் கியூ பிரிவைச் சேர்ந்த பொலீஸ் அதிகாரி கே. ஸ்ரீராமகிருஷ்ணன் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

தமிழ் தேசிய மீட்புப்படையின் முக்கியஸ்தர் ரவி அல்

[3 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### வாடகைக்கு

சங்கிலியன் சிலைக்கு முன்பாக அமைந்துள்ள கடை ஒன்று வாடகைக்கு விடப்படும். [குமார் ரெக்ஸ்ரூலுக்கு அருகாமையில்] தொடர்பு: க. கதிர்காமத்தம்பி, 231, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (18565)

### ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும், பியூட்டர 39/17, மின்சார நிலையவீதி 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (சி/0687)

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமந்தர் நோவு எண்ணெய் எஸ். ரி. மெடிக்கல்ஸ், 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம். [4326)

### சோதிடம்

உங்கள் சஞ்சலங்கள் பிரச்சினைகள் தீர அதிர்ஷ்டம் அழைக்கிறது. ஸ்ரீவிநாயகப் பெருமானின் அருட் சக்தி மெய்யாக வழங்குகிறது. பலன் தவறினால் பணம் திரும்பப் பெறலாம். சாதகத்துடன் வாருங்கள். ஸ்ரீ சக்தி கணேச உபாசகர், ஸ்ரீமாணவ விநாயகர் சோதிட நிலையம், (ஸ்ரீவீரமாகாளி கோவிலடி) 146, பருத்தித்துறை வீதி, நல்லூர். (18557)

### விண்ணப்பப்படிவம்

கணித, விஞ்ஞான பயிலுனர் ஆசிரியர், பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களுக்கான விண்ணப்பப்படிவங்கள் விற்பனைக்குண்டு. விலை ரூபா. 3/- அருண் அச்சகம், [ஷப்றா நிதி நிறுவனத்திற்கு அருகாமையில்) 15, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (அறிவுறுத்தல்களையும் பார்வையிடலாம்] (சி/0754)

### இடமாற்றம்

தீவகத்தில் ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவு ஆகிய இடங்களில் இயங்கி வந்த 'பாக்கியம் குழந்தைகள் வைத்தியசாலை' இருபாலைச் சந்திக்கு அருகாமையிலுள்ள 'குமரபுரம்' இல்லத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (18534)

## கலை, வர்த்தகக் கல்லூரி

## C. C. A.

யாழ்ப்பாணம்.

DAY CLASSES

## G.C.E. A/L 92

ஆரம்பம்: 06-11-1991
காலை 8 00

குறிப்பு:- பாடசாலை வேலாநேரம் மணவர்களே அனுமதிக்கப் படுவர்.

முழுப்பாடத்திட்டமும் முடிக்கப்படும்.

## G.C.E. A/L 93

ஆரம்பம்: 02 11-199)
காலை 8 00

[சி 0749]

## நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

## A/L 93

அரசியல் — நவம்
வரலாறு — பிள்ளை

- நிர்வாகி.

(சி/0752)

## சுகாதாரத் திணைக்களம்

## ஏல விற்பனை

எதிர்வரும் நவம்பர் மாதம் 2ஆம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணியளவில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள அரசங்க மருந்துக் களஞ்சியத்தில் ('பாலத்திற்கு' அருகாமையில்) கீழ் குறிப்பிட்ட வெற்றுக் குப்பிகளும், பாவிக்கப்பட்ட/பழுதடைந்த X-RAY பிலிம்களும் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

01 81,000 பெனிசிலின் வெற்றுக் குப்பிகள். [Empty Penclllin Via s]

02 4500 பாவிக்கப்பட்ட / பழுதடைந்த X RAY பிலிம்

சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்.
யாழ்ப்பாணம்.

29-10 1991. (சி-0864]

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

## வெளிவாரிப் பட்டப் படிப்புக்கள்

★ யாழ்/பல்கலைக் கழகத்துக்கான விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

★ பேராதனை/ பல்கலைக்கழகத்துக்கான விரிவுரைகள்

ஆரம்பம்: 02 11 1991 (11 - 00 மணி)

★ யாழ்/G. A. Q. பரீட்சைக்கு English Literature விரிவுரைகள்

ஆரம்பம்: 02-11 1991 (10 - 00 மணி.)

நிர்வாகி:
S. அருள்நங்கை.

(சி/0759)

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

## A/L 91

### Paper Classes

ஆரம்பம்: 2-11-91

தமிழ் — மீரா [2 மணி]

இந்துநாகரிகம் — அருள்நங்கை [3 மணி]

நிர்வாகி:
S. அருள்நங்கை.

[சி/0757]

## நினைவு கூருகிறோம்

தோற்றம்: 22 — 11 — 1969



மறைவு: 30 — 10 — 1986

## பொன்னம்பலம் விபுலாநந்தன்

[மத்திய கல்லூரி மாணவ தலைவன்]

| | | | |
|---|---|---|---|
| மத்தியம் | தந்த | உத்தம | மாணவன் |
| சத்தியம் | தவறா | மாணவ | தலைவன் |
| விபுலா | நந்தப் | பேரிய | லாளன் |
| அலைப் | பண்பு | கொண்ட | நண்பன் |
| கடமையில் | இறந்த | போதுதன் | உயிரை |
| அவரின் | அணைக்கு | இலக்காய்த் | தந்தவன் |
| இவனை | மறவா | திருப்போம் | என்றும் |
| எங்கே | கலையக | மண்பிது | பெரிதே: |

இங்ஙனம்:
மத்திய கல்லூரி மாணவர்கள்.

[18567]

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 23 — 06 — 1959



அந்நியன் அழிப்பு: 15 — 10 — 1987

## சதாசிவம் சிவகுமார் (சடா)

திதி: 30 — 10 — 1991

எல்லோர்க்கும் இனியவனாய்
நல்லோனாய் வாழ்ந்த - நீ
சொல்லாமல் கொள்ளாமல்
சென்ற கோலம் எம்மை வாட்ட
நெஞ்சம் பதைக்கின்றோம்
நினைவெல்லாம் நீயானாய்
நெஞ்சிருக்கும் வரை - நீ
நிறைந்திடுவாய் என்றென்றும்.

பிரிவால் துயருறும்,
ஐயா, அம்மா, சகோதர, சகோதரிகள்.
உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

கோப்பாய்தெற்கு,
இருபாலை, கோப்பாய். [18547]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிமாவோ தலைமையில் இடது சாரிக் கூட்டணி?

கொழும்பு, அக். 30

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் அனுரா பண்டாரநாயக்காவுக்கும், சிறிமாவுக்கும் இடையில் முரண்பாடுகள் அதிகரித்துள்ளதை அடுத்து சிறிமாவோ தலைமையின் பரந்த அளவில் இடதுசாரிக் கூட்டணி உருவாகலாம் என்று கொழும்பின் அரசியல் வட்டாரங்கள் ஹேஸ்யம் தெரிவிக்கின்றன.

கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு அனுரா பண்டாரநாயக்கா தெரிவாகி இருப்பது சிறிமாவோ தொடர்ந்து கட்சியின் தலைமைப் பதவியில் நீடிக்க முடியாத நிலையைத் தோற்றுவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில், சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் உள்ள எந்த ஒரு "பூர்சுவா" கட்சியுடனும் தாம் கூட்டுச் சேரத் தயார் இல்லை என்று இடதுசாரி அணியில் உள்ள நவசமசமாஜக்கட்சிச் செயலாளர் டாக்டர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

ஏதாவது ஒரு பொதுக் கிளர்ச்சிப் பிரச்சினையில் மட்டும் அவர்களுடன் இணைந்து கொள்ளத் தயார் என்றும் அவர் கூறினார்.

(இ-த)

## வவுனியா அபிவிருத்தி மாநாடு

கொழும்பு, அக். 30

வவுனியா அபிவிருத்தி குறித்த மாநாடு ஒன்று நாளை வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற உள்ளது.

சகல அமைச்சுகளின் செயலாளர்களும் இம் மாநாட்டில் கலந்து கொள்வார்கள் என்று புனர்வாழ்வு, புனரமைப்பு சமூக நலத்துறை அமைச்சர் திரு. பி. தயாரத்ன தெரிவித்தார். [இ-த]

## பயிலுனர் ஆசிரியர் சேவை

[விஞ்ஞானம் / கணிதம்]

### போட்டிப் பரீட்சை

விண்ணப்ப முடிவு திகதி: 11 - 11 - 1991

விண்ணப்பப் பத்திரத்தையும், விபரக் கொத்தினையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

### பயிற்சி வகுப்புகள்

சனி, ஞாயிறு தினங்களில்

ஆரம்பம்: 03 - 11 - 1991 10-30 மணி

பாடங்கள்: [1] பொது அறிவு,
[2] உளச்சார்பு

முழுக் கட்டணம்: 250/-

★ அச்சடித்த பாடக் குறிப்புகள் இலவசம்.

## SCHOOL OF BUSINESS ADMINISTRATION

[O.L R. தேவாலய மேற்குப் பக்கம்]
16, 3rd CROSS STREET,
JAFFNA. (சி-0858)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் A. C. கனகராஜா

அமரர் A. C. கனகராஜா (B. Sc Eng. Lond (Hons ; C E F. I C E. (U K ); F. I, E. (S. L) Former Chief Project Engineer Walker & Sons. Consulting Engineer Manoharan & Vettivel) அவர்கள் திங்கட்கிழமை (28-10-91) அன்று கொழும்பில் காலமாகிவிட்டார் என்பதை அறிந்து மிகுந்த மனவேதனை அடைகின்றோம். எமது நிறுவனம் தொடங்கிய காலம் தொட்டு எமக்கு வழங்கிவந்த ஆலோசனைகள், அறிவுரைகள் எம் நிறுவனத்தின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக இருந்தன. உங்களது அன்பும், பண்பும், எம்மீது கொண்ட பாசமும் எம் இதயத்தை விட்டு என்றும் அகலாது. உங்களது ஆலோசனையாலும், நேரடி மேற்பார்வையாலும் யாழ். நகரில் எழுந்த பல கல்லூரி கட்டடங்கள், வர்த்தக நிலையங்கள், அனாதை இல்லங்கள் என்றும் உங்கள் பெயரை நிலைத்திருக்கச் செய்யும். எம் மதிப்பிற்குரியவரே,

நீங்கள் செய்த இலவச சேவைகளினால் எல்லார் உள்ளத்திலும் நிறைந்து எம் இதயம் ஓலமிட திடீரென எம்மைப் பிரிந்துவிட்டீர்கள்.

கொழும்பில் (22, Ratnahara place, Dehiwala) நடக்க இருக்கும் இறுதிக் கிரியைகளிலும் பங்குபற்ற இயலாமல் இருப்பதை எண்ணி எம் இதயம் கனக்கின்றது. தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனோகரன் & வெற்றிவேல் நிறுவனம்,
யாழ்ப்பாணம்.

[18416]

# உதயன்

## ஆலோசனை செயலாக வேண்டும்

தெற்காசியாவில் உள்ள நாடுகள், தமது இராணுவ பலத்தை - வலிமையை - அதிகரிப்பதற்காகச் செலவிடும் பணத்தைக் குறைக்க வேண்டும். அவை தமது நாட்டு மக்களின் வறுமையைப் போக்குவதற்கும், அபிவிருத்திகளை ஊக்குவிக்கவும் கூடுதல் மூல வளங்களைப் பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறு உலகின் மிகப் பெரிய கடன் வழங்கு நிறுவனங்களில் ஒன்றான சர்வதேச நாணய சபையின் முகாமைப் பணிப்பாளர் திரு மைக்கேல் கம்டேசஸ் ஆலோசனை தெரிவித்திருக்கிறார்.

ஆசிய நாடுகளில் பலவும் அபிவிருத்தி குன்றியவை. ஆனால் மக்கள் தொகை இங்கெல்லாம் அதிகம். அதன் காரணமாக அவை வறுமை மிக்க நாடுகளாக பொருளாதாரக் கஷ்டங்களுடன் காலத்தைத் தள்ளுகின்றன.

உலக வங்கி, சர்வதேச நாணய சபை, ஆசிய அபிவிருத்தி வங்கி என்று கடன் வழங்கு நிறுவனங்களிடம் இருந்தும், ஏனைய அபிவிருத்தி அடைந்த நாடுகளிடம் இருந்தும், கடன் என்றும், நிதி உதவி என்றும், பொருள் உதவி என்றும், தொழில் நுட்ப ஒத்துழைப்பு என்றும் அவை இரந்து நிற்கின்றன.

அப்படி இரந்தும், கஷ்டப்பட்டும் வாழ்ந்த போதிலும், பல ஆசிய நாடுகள், தமது மூலவளங்களில் பெரும் பகுதியையும், நிதி வளத்தில் அதிக தொகையையும் இராணுவத்தைப் பலப்படுத்துவதற்காகச் செலவிடுகின்றன! வட்டிக்குக் கடன் வாங்கி இராணுவத்தைப் பலப்படுத்தும் நாடுகளும் உள்ளன. அவற்றுள் ஸ்ரீலங்காவும் ஒன்று!

அயல் நாடுகள் கூட போட்டி போட்டுக்கொண்டு இராணுவ பலத்தை அதிகரித்து அடுத்தவர்களை மேலாதிக்கம் புரிய முயல்கின்றன! ஸ்ரீலங்கா போன்ற நாடுகள் தமது தேசங்களில் வாழும் மக்களில் ஒரு சாராரை அடக்கி ஆள்வதற்கும் அத்தகைய மேலாதிக்க நிலையை உருவாக்குகின்றன.

"ஆசியான்", "சார்க்" போன்ற கூட்டமைப்புகளில் ஒரே அரங்கத்தில் கூடிப் பேசும் நாடுகள் கூட, போட்டி போட்டுக் கொண்டு தங்கள் இராணுவ பலத்தை வளர்க்கின்றன. அணு ஆயுதங்களை பயன்படுத்த முண்டி அடிக்கின்றன.

மூன்றாம் உலக நாடுகளில் ஆயுதங்களை சந்தைப்படுத்திப் பணம் தேட முயலும் வளர்ச்சி கண்ட நாடுகள் இதற்குத் துணை போகின்றன என்பதையும் கவனத்தில் கொள்வது அவசியம்.

இது ஆசிய நாடுகளின் வளர்ச்சிக்கு மட்டுமன்றி, அந்நாடுகளின் மக்களதுமுன்னேற்றத்துக்கும் பெரும் தடையாகும். ஆகையால் சர்வதேச நாணயசபை வெறும் ஆலோசனை வழங்காமல் செயலில் இறங்க வேண்டும்.

தான் வழங்கும் பணம் இராணுவத்தைப் பலப்படுத்தப் பயன்படுத்தப்படுவதில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்குரிய நிபந்தனைகளை விதிக்க வேண்டும். நிபந்தனைகள் மீறப்படுகின்றனவா என்று கண்காணிப்பது அவசியம். நிபந்தனைகளைக் கடைப்பிடிக்கவில்லை என்றால் தான் வழங்கும் உதவிகளை அடியோடு நிறுத்தி விட வேண்டும்.

இதே அணுகு முறையை உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் மேற்கத்தைய நாடுகளும் பின்பற்றினால் ஆசிய நாடுகளில் இராணுவம் மேலோங்குவதைத் தடுத்து மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கு உதவ முடியும்.

## வர்த்தகர்கள் பொருள் பட்டியலை நாளைக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்

யாழ்ப்பாணம், அக். 30

யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மொத்த வியாபாரிகளும், சில்லறை வியாபாரிகளும், தம்வசம் உள்ள அத்தியாவசிய உணவுப்பொருள்கள் பற்றிய விவரப் பட்டியல்களை நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன் உதவி அரச அதிபர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்தில் அவர்களிடம் உள்ள பொருள்கள், பதுக்கல் செய்யப்பட்டவையாகக் கருதப்படும் என்று உதவி அரச அதிபர் அறிவித்துள்ளார். [அ]

## ஜி. சீ. ஈ. (சா. தா) பரீட்சை இங்கு நடத்துவது குறித்து முடிவு இல்லை

கொழும்பு, அக். 30

இந்த வருடத்துக்கான ஜி. சீ. ஈ. சாதாரண தரப் பரீட்சை டிசம்பர் 9 ஆம் திகதி ஆரம்பமாகும். வடக்கு — கிழக்கிலும் இப்பரீட்சையை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனினும் வடக்கு — கிழக்கில் இப்பரீட்சையை நடத்தக் கூடிய தகவல்கள் கிடைக்கும் பட்சத்திலேயே இது குறித்து முடிவு செய்யப்படும்.

பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல இப்படித் தெரிவித்தார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சை முடிவுகள் நவம்பர் 15 ஆம் திகதி வெளிவந்துவிடும் என்றும் பரீட்சை ஆணையாளர் கூறினார்.

1990 ஆண்டு டிசம்பருக்குரிய ஜி சீ ஈ. [சாதாரண தர] பரீட்சையும், 1991 ஆகஸ்டிற்குரிய ஜி சீ. ஈ. [உயர்தரப்] பரீட்சையும இதுவரை வடக்கு, கிழக்கில் நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. [உ-இ-த]

## நாதஸ்வர இசையில் விடுதலைப் பாடல்கள்

### ஒலிப்பதிவு நாடாவாக வெளிவருகிறது

யாழ்ப்பாணம், அக. 30

தாயக விடுதலைப் பாடல்களை நாதஸ்வர இசையிலும் கேட்பதற்கு வாய்ப்பு ஏற்பட உள்ளது. நாதஸ்வர கானவாருதி வி. கே. பஞ்சமூர்த்தி நாதஸ்வர இசையில் உருவாக்கிய 'இசையருவி'' ஒலிப்பதிவு நாடா விரைவில் வெளிவரவுள்ளது.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் ஆதரவில வெளிவரவுள்ள 'இசையருவி'' ஒலிப்பதிவு நாடாவில் பத்து தாயக விடுதலைப் பாடல்கள் உள்ளன. நாதஸ்வர இசையுடன் தவில், மிருதங்கம், தபேலா, வயலின் உட்பட மேற்கத்தைய இசைக் கருவிகளையும் இணைத்து ஒலிப்பதிவு ஆக்கியுள்ளமை சிறப்பம்சமாகும்.

விடுதலை புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் தமிழீழக் கலைஞர்களின் இசைப் படைப்புக்களை தொடர்ந்து வெளியிடுவது என்ற திட்டத்தின் உருவாக்கமே இந்த ஒலிபபதிவு நாடா என்று கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (அ)

## தமிழக கரையோரப் பாதுகாப்பு சென்னையில் உயர் மட்டப் பேச்சு

சென்னை, அக். 30

தமிழ்நாட்டின் கரையோரப் பகுதிகளில் பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட உள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுடன் பேச்சு நடத்த மத்திய பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் கிருஷ்ணகுமார் தலைமையில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வாழைத் தோட்டங்கள் அழிந்தன

யாழ்ப்பாணம், அக். 30

கடந்த இரு தினங்களாகப் பெய்த மழையினாலும் கடும் காற்றினாலும் சிறுப்பிட்டி, நக்கிரி, நீர்வேலி, கோப்பாய் ஆகிய பகுதிகளில் உள்ள பல வாழைத் தோட்டங்கள் அழிந்துள்ளன.

வாழை மரங்கள் அடியோடு சாய்ந்து கிடக்கின்றன.

நான்கு மாதங்களுக்கு முன்னர் வீசிய கடுங்காற்றினால் இப்பகுதி வாழைத்தோட்டங்கள் பெரும் அழிவுற்றிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. [க.-15]

## புதிய ஐநூறு ரூபா நோட்டு

கொழும்பு, அக் 30

மத்திய வங்கி புதிய ஐந்நூறு ரூபா நோட்டை இன்று வெளியிடும் என்று வங்கியின் ஆளுநர் டாக்டர் எச். எஸ். கருணாதிலகா தெரிவித்திருக்கிறார். [உ-எ]

## அகதிகள் இடமாற்றம்

யாழ்ப்பாணம், அக். 30

யாழ். ரயில் நிலையத்தில் தங்கியிருந்த அகதிகள் மழை காரணமாக வேறு இடத்துக்கு இடம் மாற்றப்பட்டனர்.

அங்கு தங்கியிருந்த சுமார் 65 குடும்பங்கள் பெருமாள் கோவிலுக்கு முன்பாக உள்ள சன்மார்க்க வித்தியாலயத்துக்கு இடம் மாற்றப்பட்டுள்ளனர்.

## இலங்கையில் 266 கோடீஸ்வரர்!

கொழும்பு, அக்: 30

1990 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் படி இலங்கையில் ஆண்டு ஒன்றுக்கு 10 லட்சம் ரூபா வருமானம் பெறும் 266 பேர் உள்ளனர். உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகம் திரு பி. ரத்தினச்சந்திரன் இத்தகவலைத் தெரிவித்தார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு தமது வருமானத்தை வெளிக்காட்டியோரின் 266 பேர் மட்டுமே தமது ஆண்டு வருமானத்தை 10 லட்சம் ரூபாவாகக் காட்டி உள்ளனர். (இ-த)

## தமிழகத்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ணிக்கை 500 ஆகக் குறைக்கப்பட்டது என்றும் தெரிந்தவையே.

தற்போது திடீர் என இந்த ஏற்பாட்டில் மாற்றம் செய்யப்பட்டு, முதல் தொகுதியில் 800 அரச ஊழியர்களைக் கொண்டு வருவதற்கு முடிவாகி இருக்கிறது. (இ-த)

## வடக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வடக்கு - கிழக்கு யுத்தம் குறித்து சிரத்தை எதுவும் கொள்ளவில்லை.

இவ்வாறு பி. பி. ஸி. செய்தியாளர் தமது அரசியல் விமர்சனம் ஒன்றில் தெரிவித்திருக்கிறார். (அ-ச)

## அம்பாறைப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ தொலைத்தொடர்பு கருவி — 01

★ ஜே. ஆர் ரக கிரனேட் — 01

இதேசமயம் —

அம்பாறை மாவட்டம் 14ஆம் கிராமத்தில் ரோந்து சென்ற படையினரும், விடுதலைப் புலிகளும் எதிர்பாராத விதமாக நேருக்கு நேர் சந்தித்தபோது மோதல் ஏற்பட்டது.

இந்தச் சம்பவத்தில் இராணுவ தரப்புக்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து தெரிய வரவில்லை.

விடுதலைப் புலிகள் தரப்பில் பாலு (சுப்பிரமணியம் நாகப்பன் - மட்டக்களப்பு) என்ற போராளி வீரமரணம் அடைந்தார். (ஓ)

## திருமலை....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டனர் என்று கொழும்பில் ஸ்ரீலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகள் கடந்த ஐந்து நாட்களாக கிழக்கு மாகாணத்தில் தமது தாக்குதல் நடவடிக்கைகளை முடுக்கி] விட்டிருப்பதாகத் தெரிகிறது.

புலிகளின் அதிரடித் தாக்குதல்களினால் கடந்த வெள்ளிக்கிழமை கொக்கட்டிச் சோலையில் 7 படையினரும்—

ஞாயிற்றுக்கிழமை வெலிக்கந்தையில் 14 படையினரும்—

அதே தினம் அம்பாறைப் பகுதியில் 4 படையினரும்—

நேற்று திருமலை சேருநுவரவில் 8 படையினரும் மொமாத்தம் 83 படையினர் உயிரிழந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய தாக்குதலின் போது புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு:-

★ ரி 56 - 2 ரகத் துப்பாக்கி —03

★ கைக்குண்டு செலுத்தும் ரவைக்கூடு —10

★ 303 ரக துப்பாக்கி —01

★ அதற்கான ரவைக்கூடு —04

★ 7 62 நடுத்தர ரவைகள் —420

★ ஜே. ஆர் ரக கிரனேட் —01

(ஓ-எ)

## மட்டக்களப்புப் பகுதியில் படையினர் அடாவடித்தனம்

யாழ்ப்பாணம், அக். 20

மட்டக்களப்பு மாவட்டம் புல்லுமலை முகாம் இராணுவத்தினர் கடந்த சனிக்கிழமை, தமிழர் வாழும் 98ஆம் கொலனிப் பகுதிக்குச் சென்று அடாவடித்தனங்களில் ஈடுபட்டனர்.

அப்பகுதியில் படையினர் கண்டபடி துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தனர். பின்னர் மூன்று வீடுகளை எரித்து நாசமாக்கினர். அத்தோடு தமிழருக்குச் சொந்தமான சைக்கிள்கள் மற்றும் உடைமைகளை அவர்கள் அபகரித்துச் சென்றனர்.

அதேசமயம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கரடியனாறு முகாம் படையினர் மரப்பாலம் பகுதிக்குச் சென்று, தமிழர்களின் பொருள்களைச் சூறையாடினர். அங்கு தமிழர் ஒருவர் கைதானார்.

## 13 ஆயிரம் பொலீஸார் கொழும்பில் கடமையில்

கொழும்பு, அக். 30

அடுத்த மாதம் ஏழாம் திகதி கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் ஆரம்பமாகவிருக்கும் சார்க் தலைவர்களின் உச்சிமாநாட்டையொட்டி நேற்று முதல் 13 ஆயிரம் பொலீஸாரும், அதிரடிப்படையினரும் கொழும்பு நகரப்பகுதியில் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றனர்.

மாநாட்டுக்கான முன்னேற்பாடுகள் யாவும் பூர்த்தியாகிவிட்டன என்றும்—

சார்க் நாட்டு தலைவர்களின் அதிகாரிகள் நேற்று கொழும்பு வர ஆரம்பித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது

சார்க் வெளிவிவகார அமைச்சர்களின் கூட்டம் எதிர்வரும் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் நடைபெறும். அப்போது உச்சி மாநாட்டின் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்படும். [உ-3]

## மத்திய கிழக்கு மாநாடு இன்று

மட்றிட், அக். 30

மத்திய கிழக்கு சமாதான மாநாடு இன்று புதன்கிழமை ஸ்பெயின் தலைநகர் மட்றிட்டில் ஆரம்பமாகிறது

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் சோவியத் ஜனாதிபதி மிக்கெயில் கோர்பச்சேவும் இம்மாநாட்டின் அழைப்பாளர்களாக உள்ளனர்.

இருவரும் மாநாட்டின் அங்குரார்ப்பண நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

தமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு தோல்வியில் முடிந்த சதிப்புரட்சியின் பின்னர் ஜனாதிபதி கோர்பச்சேவ், ஜனாதிபதி புஷ்ஷை மட்றிட்டில் வைத்தே முதல் தடவையாகச் சந்திக்க இருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

40 ஆண்டுகளுக்கு மேலாகத் தீர்க்கப்படாது இருந்துவரும் பலஸ்தீனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு ஒன்றைக் காணுவதற்காக மத்திய கிழக்கு சமாதான மாநாடு கூட்டப்பட்டுள்ளது.

இதேவேளை —

சமாதான மாநாடு தேவையில்லை என்றும் அதனை ஆட்சேபித்தும் லட்சக்கணக்கான இஸ்ரவேலியர்கள் நேற்று டெல் அவிவில் பிரமாண்டமான ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

அரபுகளுக்குஎவ்விதசலுகையும் வழங்கப்படக் கூடாது என்றும் அவர்கள் கோஷமிட்டனர்.

## அதிபர், ஆசிரியர் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், அக். 30

தென்மராட்சி கல்விக் கோட்ட அதிபர்கள், ஆசிரியர்களுக்கான கூட்டங்கள் நாளையும், நாளை மறுதினமும் பகல் ஒரு மணிக்கு கொத்தணி அடிப்படையில் நடைபெற இருப்பதாக கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதற்காக —

மட்டுவில், கைதடி, சாவகச்சேரி நகர், சாவகச்சேரி வடக்கு கொத்தணியில் கடமையாற்றுபவர்களை நாளை சாவகச்சேரி றிபேக் கல்லூரியிலும் —

உசன், வரணி, கொடிகாமம் கொத்தணியில் கடமையாற்றுபவர்களை நாளை மறுதினம் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்திலும் — கூடுமாறு கோரப்பட்டுள்ளது. [ஓ-3]

## தமிழ் தேசிய...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

லது ரவிச்சந்திரன் [21வயது] என்றும்—

தமிழகத்தில் கிளர்ச்சியைத் தூண்ட விடுதலைப் புலிகள் வகுத்திருந்த சதி, ரவி கைதானதை அடுத்து அம்பலமானதாகவும்— பிரஸ்தாப பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

பழனியில் கைதான ஆறு பேரில் ரவியும் ஒருவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் நாட்டில் இளைஞர்களைத் திரட்டி ஆயுதப் பயிற்சி அளிப்பதற்காக ரவிக்கும் அவரது குழுவினருக்கும் விடுதலைப் புலிகள் ஏழு லட்சம் ரூபாவை வழங்கி இருந்தனர் என்றும் சரியான ஒரு சமயத்தில் புலிகளுக்கு ஆதரவாக தமிழகத்தில் கிளர்ச்சி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம், திண்டுக்கலில் கைதான புலிகள் அனுதாபியான தியோடர் சார்ள்ஸ் என்பவரின் வீட்டில் இருந்து சக்தி வாய்ந்த வயர்லஸ் கருவி ஒன்றும், 6 தங்கப் பாளங்களும் கைப்பற்றப்பட்டிருக்கின்றன என்றும் பொலீஸ் அதிகாரி இராமகிருஷ்ணன் கூறினார். (இ-த)

## சாஹித்திய விழா

1988 - 89 ஆம் ஆண்டுக்கான சாஹித்திய விழா பரிசளிப்பு நிகழ்ச்சிகள் நவம்பர் 23 ஆம் திகதி மட்டக்களப்பு புனித சூசையப்பர் கல்லூரியில் நடைபெறும்.

## வி. பி. சிங் ..,

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதற்காகச் சென்ற வி. பி சிங்கும் மற்றும் இடதுசாரித் தலைவர்களும் மாநில அரசின் காவல் துறையினால் கைது செய்யப்பட்டிருந்தனர். [உ-எ-3]

## ஈழ அகதி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டில் திடீர் மாற்றம் செய்யப்பட்டு திருகோணமலைத் துறைமுகத்தில் ஈழ அகதிகளைக் கொண்டு வந்து இறக்குவதற்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## முத்துக்கிருஸ்ணபிள்ளை சுவாமிநாதர்

[வைத்தியர்]

முத்துக்கிருஸ்ணபிள்ளை சுவாமிநாதர் [28 - 10 - 91] அன்று காலமானார். இவர் கமலாதேவியின் அன்புக் கணவரும், தெய்வேந்திரன் [கனடா], சிறீகாந்தா, சசிதேவி, சிவநேசன் [கனடா] ஆகியோரின் அன்புத் தகப்பனும், தேவகுமாரின் அன்பு மாமனும், சாயிரூபன், சாய்சியாம், சாய்மா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று (29 - 10 - 91) மாலை 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கொத்தியாலடிச் சுடலையில் தகனக்கிரியைகள் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிறீகாந்தா

முத்துக்கிருஸ்ணர் வீதி,
கன்னாகம். [18412]

## திரு. விசுவலிங்கம் பரமநாதன்

[ஓய்வுபெற்ற ஆசிரியர்]

இல. 18, பாரதி வீதி, சுண்டுக்குளியில் வசித்தவராகிய திரு. விசுவலிங்கம் பரமநாதன் 29 - 10 - 1991 செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார். இவர் சிவமாதேவியின் அன்புக் கணவரும், ஆனந்தி, சுதந்தி, அயிலன் [நோர்வே], முகுந்தி [நோர்வே] ஆகியோரின் அன்புத் தந்தையும், திருஅருட்செல்வம் [யாழ். மாவட்டப் பதிவகம்], சந்திரமோகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பஞ்சரத்தினம் [ஓய்வுபெற்ற லிகிதர்], நடராசா [ஓய்வுபெற்ற விவசாய உத்தியோகத்தர்], தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவசுப்பிரமணியம் [பிரதம வரி விதிப்பாளர், கொழும்பு மாநகரசபை] ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் அரியாலை சிந்துபாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
சி. திருஅருட்செல்வம்
[மருமகன்]

(18569)

## மூர்த்தி முகுந்தன்

தொல்புரம் மேற்கைச் சேர்ந்த மூர்த்தி முகுந்தன் (பழைய மாணவன் யாழ்ப்பாணக் கல்லூரி) அகால மரணமாகிவிட்டார். அன்னார் நாராயணமூர்த்தி, சரோஜினிதேவி தம்பதிகளின் அருமைப் புதல்வனும், சுவிற்றியின் அன்பு அண்ணாவும், பொன்னுத்துரை தம்பதிகளினதும், பண்டத்தரிப்பு காலஞ்சென்ற ஆசிரியர் செல்லத்துரை தம்பதிகளினதும் அருமைப் பேரனுமாவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை செவ்வாய்க்கிழமை 29-10-91 காலை 10 மணிக்கு பொறளை கனத்தையில் நடைபெற்றது என்பதை உற்றார், உறவினர் நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
வ. பொன்னுத்துரை
[பேரன்]

பொன்னர் வளவு
தொல்புரம் மேற்கு,
சுழிபுரம் [18576

## ஆறுமுகம் குகதாசன்

பதுளையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் குகதாசன் (சிவம்) காலமாகிவிட்டார். இவர் இராசராசேஸ்வரியின் அன்புக் கணவரும், சிந்துஜா, கணேசானந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆறுமுகம், இரத்தினம் ஆகியோரின் மகனும், குகநேசன், குகபாலன், குகசீலன், பவானி குகநாயகி, குமுதி, குகவ ஜினி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கார்த்திகேசு, மயில்வாகனம், காமாட்சிப்பிள்ளை, தெய்வானைப்பிள்ளை முருகேசு ஆகியோரின் பெறாமகனும், தனபாலசிங்கம், இராசதுரை ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று மாலை 2-00 மணியளவில் நீர்வேலி மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
அ. ஆறுமுகம்

நீர்வேலி வடக்கு. [18413]

# பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் தெரிவு; விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், அக். 30

பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் பதவிக்கு நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பரீட்சையில் தெரிவு செய்யப்படுவோர் மூன்று வருடங்களுக்குப் பட்டதாரி பயிலுநர் ஆசிரியராகக் கடமையாற்றுவர். மூன்று வருடங்களின் பின்னர் நடத்தப்படும் தகுதிகாண் பரீட்சையில் சித்தி பெறுபவர்களுக்கு மட்டுமே ஆசிரியர்களாக நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

பட்டதாரி ஆசிரியர் பதவிகளுக்கு இதற்கு முன்னர் வெளிவந்த அறிவித்தல்களின் பிரகாரம் விண்ணப்பித்தவர்களும் இம்முறை விண்ணப்பிக்கலாம்.

மாகாண அரசாங்க சேவையில் சேர்த்துக்கொள்ளப்படும் பட்டதாரி பயிலுநர் ஆசிரியருக்கு சகல படிகளும் உட்பட திரட்டிய சம்பளமாக 2,050 ரூபா வழங்கப்படும்.

40 வயதுக்குக் குறைந்த, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகள் போட்டிப் பரீட்சைக்கு 25-11-1991ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை, பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

[நியமனம் மற்றும் பரீட்சை சம்பந்தமாக முழு விவரங்களையும் உதயன் பணிமனையில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்].

# பெரும் இன்னல் மத்தியில் வவுனியாப் பயணம்

கொழும்பு, அக். 30

கேரதீவு — சங்குப்பிட்டி போக்குவரத்து தடைப்பட்டதால் வடபகுதிப் பயணிகள் பெரும் இரமங்களின் மத்தியில் வவுனியா வந்தடைகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

புதர்கள், சேறு, தண்ணீர் ஆகியவற்றினூடாக பயணிகள் பல மைல்கள் தூரம் நடந்தே வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

வடக்கில் இருந்து வரும் பயணிகள் நொச்சிமோட்டைப் பாலத்தில் படையினரால் சோதனையிடப்பட்ட பின்னர் லொறிகளில் தாண்டிக்குளம் வரை ஏற்றி அனுப்பப்படுகின்றனர். தாண்டிக்குளத்தில் இருந்து வவுனியாவுக்குச் செல்ல போக்குவரத்துச் சபைபஸ்களும், தனியார் பஸ்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அதேபோன்று கொழும்பில் இருந்து வடக்கே வரும் பயணிகள் தாண்டிக்குளம் சோதனையின் பின்னர் படையினரால் லொறிகளில் நொச்சிமோட்டைக்கு ஏற்றி வரப்படுகின்றனர். [இ-ச]

# கொழும்பு சார்க்கிற்கு பிரதமர் ராவ் வருவார்!

## கூட டிக்ஸிற்றும் வரலாம்

கொழும்பு, அக். 30

எதிர்வரும் நவம்பர் மாதம் 7ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவுள்ள சார்க் உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் நிச்சயமாகக் கலந்து கொள்வார்.

இத்தகவலை புதுடில்லியில் வெளியுறவு அமைச்சக அதிகாரி ஒருவர் வெளியிட்டார்.

திரு. நரசிம்மராவ் இம்மாநாட்டில் கலந்து கொள்ள மாட்டார் என்று சில பத்திரிகைகளில் வெளியான செய்திகளை அந்த அதிகாரி மறுத்தார்.

இதேவேளை, அடுத்த மாதம் 30ஆம் திகதி இந்திய வெளியுறவுத் துணைச் செயலாளராகப் பதவி ஏற்கவிருக்கும் ஜே. என். டிக்ஸிற்றும் இந்தியப் பிரதமருக்கு உதவியாளராக வரக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், அக். 30

இன்று புதன்கிழமை யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற இருந்த வரலாறு பாட நூல் கருத்தரங்கு நவம்பர் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## டெங்கு காய்ச்சல்

கொழும்பு, அக். 30

வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை காரணமாக டெங்குக் காய்ச்சல் பரவும் ஆபத்து தோன்றி இருப்பதாக கொழும்பில் சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். (இ-த)


கலை, வர்த்தகக் கல்லூரி
C C. A.
யாழ்ப்பாணம்.

A/L 91
வினா விடை வகுப்புகள் நடைபெறுகின்றன.
பொருளியல்: பணம் வரவு செலவுத்திட்டம்.
கணக்கியல்: கம்பனி முடிவுக் கணக்கு.
வர்த்தகம்: அளவையியல்;
குறிப்பு:
(1) கடந்த 15 வருட வினா - விடை வகுப்புகள் நடைபெறும்.
(2) நேர அட்டவணை 8 மணி முதல் 1 மணி வரை.
[சி-0755]


## தமிழக கரை...

[3ஆம் பக்கத் தொடர்ச்சி]

தூதுக்குழு ஒன்று இன்று புதன்கிழமை சென்னை வருகிறது.

இந்திய கடற்படைத் தளபதி அட்மிரல் ராமதாஸும் இக்குழுவில் இடம்பெறுவார்.

இந்தியப் பிரதமர் திரு. பி. வி. நரசிம்மராவ் கடந்த வாரம் சென்னை வந்து செல்வி ஜெயலலிதாவுடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தே இணை அமைச்சர் கிருஷ்ணகுமார் தலைமையிலான குழுவை அனுப்ப மத்திய அரசு முடிவு செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கச்சதீவுப் பகுதியிலும் மற்றும் இந்தியக் கடல் பகுதிகளிலும் ஸ்ரீலங்காப் படையினரிடம் இருந்து இந்திய மீனவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்றும்—

பாக்கு நீர் சந்தியில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைத் தடுக்க தமிழ் நாட்டின் கரையோரப் பகுதிகளில் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும் என்றும்—

நரசிம்மராவுடனான சந்திப்பின் போது செல்வி ஜெயலலிதா வலியுறுத்தியிருந்தார். (இ-ச)

# மண்டைதீவுக் கடற்பகுதியில் பீரங்கிக் கப்பல் தரிப்பு

## நேற்றுக் காலை கவிபர் தாக்குதல்

மண்டைதீவுக் கடலில் நேற்றுக் காலை முதல் மாலை வரை பீரங்கிக் கப்பல் ஒன்று காணப்பட்டது.

அதேசமயம் கப்பலின் துணைப் பீரங்கிப் படகுகள் அடிக்கடி அப்பகுதியில் ரோந்து புரிந்தன.

இந்தப் படகுகளில் இருந்து நேற்றுக் காலை 6 மணியளவில் தொடர்ச்சியாக கலிபர் தாக்குதல் நடத்தப்பட்டது.

குருநகர், பாஷையூர், கொழும்புத்துறைப் பகுதிகளில் மக்கள் நடமாட்டத்தைக் கண்ணுற்றே, படையினர் தாக்குதல் நடத்தினர் என்று சொல்லப்பட்டது.

இந்த தாக்குதலை அடுத்து மேற்படி பகுதிகளை சேர்ந்த மக்கள் மத்தியில் பதற்றம் நிலவியது. (ஒ-15-51)

## விவசாயம் பற்றி சொற்பொழிவு

யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தைச் சேர்ந்த கலாநிதி ப. சிவகடாட்சம் "விவசாயம்—இன்று, நேற்று, நாளை" என்னும் பொருளில் உரையாற்ற உள்ளார்.

இந்நிகழ்ச்சி இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு யாழ். செஞ்சிலுவைச் சங்கப் பணிமனையில் இடம்பெறும். பாடசாலை மாணவர்களும் சொற்பொழிவைக் கேட்க அனுமதிக்கப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை சிற்றம்பலம்

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சிற்றம்பலம் காலமானார். இவர் நல்லம்மாவின் அன்புக் கணவரும், நவரத்தினம் [அமெரிக்கா], தேவநாயகி, சிவபாக்கியலட்சுமி, இந்திராணி [ஓய்வுபெற்ற விற்பனைத் திணைக்கள ஊழியர்], மகேஸ்வரி [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், ராணி [அமெரிக்கா], பாலசிங்கம், மாணிக்கவாசகம் (ஓய்வு பெற்ற விற்பனைத் திணைக்கள ஊழியர்), நித்தியானந்தன் [ஓய்வு பெற்ற பிராந்திய விற்பனைத் திணைக்கள ஊழியர்] ஆகியோரின் மாமனாரும், சிந்தா, தவேந்திரன், சுரேஸ்குமார், விஸ்ணுவர்த்தனன், சுதாகினி, அனுஷியா, நகிந்தன், மஞ்சுளா, துஷ்யந்தன், துஷ்யந்தி, தமயந்தி, ரஜனி, துஷான், மகேஸ்வரி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [30-10-91] இல. 53, சங்கீதா வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பி. ப. 1 மணியளவில் பூதவுடல் திருநெல்வேலி செம்பாட்டு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்
த. நித்தியானந்தன்

53, சங்கீதா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். [18415]

## பிலிப் லிகோரி சந்தியாகோ

(Rtd. Asst. Conservator of Forest)

14, இராஜேந்திரா வீதியைச் சேர்ந்த பிலிப் லிகோரி சந்தியாகோ காலமானார். இவர் பிலோமினாவின் அன்புக் கணவரும், பிறின்சி, ரைற்றஸ் (Titus Snacks), பீற்றர் போல் (University of Ibadan Nigeria), அகத்தா, யஸ்ரஸ் (Health Superviser J. M. C.) மாலின் (Canada), லோஜினி (Teacher St. James) ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியதாஸ் Lecturer, University of Jaffna), இந்திராணி, சந்திரா (University of Ibadan, Nigeria), அருள்பிரகாசம் (Teacher, St. Patrics College), சியாமா (Teacher, மண்கும்பான் G T M S), தேவதாஸ் (Canada) ஆகியோரின் அன்பு மாமனாரும், அலன், ஜோசப், சிந்துஜா, தனுஜா, கீர்த்திகா, அஜந், நந்திகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 30-10-91 பிற்பகல் 3 மணிக்கு 45/1, ஸ்ரான்லி கல்லூரி ஒழுங்கை இல்லத்திலிருந்து நல்லடக்கத்துக்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள்

45/1, ஸ்ரான்லி கல்லூரி ஒழுங்கை. [18417]

## திரு. A. C. கனகராஜா

முன்னாள் பொறியியலாளர், [Walker and Sons Ltd.]

திரு. A. C. கனகராஜா 28-10-91 அன்று கொழும்பில் காலமானார். இவர் Dr. ஜோய் கனகராஜாவின் [Mcleod Hospital, Inuvil] அன்புக் கணவரும், சந்திரன், அருணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திரு. திருமதி S. V. சின்னப்பாவின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்ற திரு D R குணசேகரம் - திருமதி லில்லி குணசேகரத்தின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வண. பிதா A C. துரைராஜா, A C. செல்வராஜா, A C ஜெயராஜா, A C முத்துராஜா, Grace சற்குணசிங்கம், Mercy இராஜநாயகம், Rosy தம்பிஐயா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அடக்க ஆராதனை கொழும்பு இல. 22 Ratnakara Place, Dehiwela இல் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr. [திருமதி] ஜோய் கனகராஜா
[Mcleod Hospital, Inuvil]

[18414]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 30-10-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org